# தாய்மொழி தினவிழா

21.02.2020 அன்று காலை 11.30 மணியளவில் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் கீழ் இயங்கும் தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரியில் தாய்மொழி தினவிழாக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் தமிழத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.சீ.மகேஸ்வரி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர்.இரா.இராசாமணி அவர்கள் தலைமைதாங்கினார். தமிழ்த்துறைத்தலைவர் முனைவர்.இரா.இராகினி அவர்கள் தாய்மொழியின் சிறப்புளை சிறப்பித்து சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் தாய்மொழி தின உறுதிமொழியை வழங்க பேராசிரியர்களும், மாணவர்களும் உறுதி ஏற்றனர். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.ந.எழிலரசன் தலைமையில் கவியரங்கமும், உதவிப்பேராசிரியர் முனைவர்.ப.ஜெயராஜ் தலைமையில் பேச்சரங்கமும் நடைபெற்றது. மேலும், மாணவிகளின் பாட்டு, நடனம் போன்ற கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. ஆங்கிலத்துறைத்தலைவர் முனைவர்.கோ.சண்முகம் அவர்கள் வாழத்துரை வழங்கினார். இவ்விழாவில் பல்துறை பேராசிரியர்களும் மாணவ, மாணவிகளும் கலந்துகொண்டனர். தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர்.கோ.அறிவழகி நன்றிகூற, நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.




கரந்தைத் தமிழ்ச் சங்கம்




தமிழ்ச் சங்கம்

